## சங்கீதம் 31

**(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப் பட்ட தாவீதின்சங்கீதம்.)**

1. **கர்த்தாவே,**
உம்மை நம்பியிருக்கிறேன்;
நான் ஒருக்காலும்
வெட்கமடையாதபடிச்
செய்யும்; உமது நீதியினிமித்தம்
என்னை விடுவியும்.

2. உமது செவியை
எனக்குச் சாய்த்து, சீக்கிரமாய்
என்னைத் தப்புவியும்;
நீர் எனக்குப் பலத்த துருகமும்,
எனக்கு அடைக்கலமான
அரணுமாயிரும்.



3. என் கன்மலையும்
என் கோட்டையும் நீரே;
உமது நாமத்தினிமித்தம்
எனக்கு வழிகாட்டி,
என்னை நடத்தியருளும்.



4. அவர்கள் எனக்கு மறைவாய்
வைத்த வலைக்கு
என்னை நீங்கலாக்கிவிடும்;
தேவரீரே எனக்கு அரண்.

5. உமது கையில் என் ஆவியை
ஒப்புவிக்கிறேன்: சத்தியபரனாகிய
**கர்த்தாவே,** நீர்
என்னை மீட்டுக்கொண்டீர்.

6. வீண்மாயைகளைப் பற்றிக்
கொள்ளுகிறவர்களை
நான் வெறுத்து, **கர்த்தரையே**
நம்பியிருக்கிறேன்.

7. உமது கிருபையிலே களிகூர்ந்து
மகிழுவேன்; நீர்
என் உபத்திரவத்தைப் பார்த்து,
என் ஆத்துமவியாகுலங்களை
அறிந்திருக்கிறீர்.

8. சத்துருவின் கையில்
என்னை ஒப்புக்கொடாமல்,
என் பாதங்களை
விசாலத்திலே நிறுத்தினீர்.

9. எனக்கு இரங்கும் **கர்த்தாவே,**
நான் நெருக்கப்படுகிறேன்;
துக்கத்தினால் என் கண்ணும்
என் ஆத்துமாவும் என் வயிறுங்
கூடக் கருகிப்போயிற்று.

10. என் பிராணன் சஞ்சலத்தினாலும்,
என் வருஷங்கள் தவிப்பினாலும்
கழிந்து போயிற்று;
என் அக்கிரமத்தினாலே
என் பெலன் குறைந்து,
என் எலும்புகள் உலர்ந்து
போயிற்று.

②

11. என் சத்துருக்களாகிய
யாவர் நிமித்தமும்,
நான் என் அயலாருக்கு நிந்தையும்,
எனக்கு அறிமுகமானவர்களுக்கு
அருக்களிப்புமானேன்;
வீதியிலே என்னைக்
கண்டவர்கள் எனக்கு விலகி
ஓடிப்போனார்கள்.

12. செத்தவனைப்போல
எல்லாராலும் முழுவதும்
மறக்கப்பட்டேன்; உடைந்த
பாத்திரத்தைப் போலானேன்.

13. அநேகர் சொல்லும்
அவதூறைக் கேட்டேன்;
எனக்கு விரோதமாக
அவர்கள் ஏகமாய் ஆலோசனை
பண்ணுகிறதினால் திகில்
என்னைச் சூழ்ந்துகொண்டது;
என் பிராணனை
வாங்கத் தேடுகிறார்கள்.

14. நானோ, **கர்த்தாவே,**
உம்மை நம்பியிருக்கிறேன்;
நீரே என் தேவன்
என்று சொன்னேன்.

15. என் காலங்கள்
உமது கரத்திலிருக்கிறது;
என் சத்துருக்களின் கைக்கும்
என்னைத்
துன்பப்படுத்துகிறவர்களின்
கைக்கும் என்னைத் தப்புவியும்.

16. நீர் உமது முகத்தை
உமது ஊழியக்காரன்மேல்
பிரகாசிக்கப்பண்ணி,
உமது கிருபையினாலே
என்னை இரட்சியும்.

17. **கர்த்தாவே,** உம்மை நோக்கிக்
கூப்பிட்டேன்;
நான் வெட்கப்பட்டுப்
போகாதபடிச் செய்யும்;
துன்மார்க்கர் வெட்கப்பட்டுப்
பாதாளத்தில்
மவுனமாயிருக்கட்டும்.

18. நீதிமானுக்கு விரோதமாய்ப்
பெருமையோடும்
இகழ்ச்சியோடும் கடினமாய்ப்
பேசுகிற பொய் உதடுகள்
கட்டப்பட்டுப் போவதாக.

19. உமக்குப் பயந்தவர்களுக்கும்,
மனுபுத்திரருக்கு முன்பாக
உம்மை நம்புகிறவர்களுக்கும்,
நீர் உண்டுபண்ணி வைத்திருக்கிற
உம்முடைய நன்மை எவ்வளவு
பெரிதாயிருக்கிறது!



20. மனுஷருடைய அகங்காரத்துக்கு
அவர்களை உமது சமூகத்தின்
மறைவிலே மறைத்து,
நாவுகளின் சண்டைக்கு
அவர்களை விலக்கி,
உமது கூடாரத்திலே ஒளித்து
வைத்துக் காப்பாற்றுகிறீர்.

21. **கர்த்தர்** அரணான நகரத்தில்
எனக்குத் தமது கிருபையை
அதிசயமாய்
விளங்கப்பண்ணினபடியால்,
அவருக்கு ஸ்தோத்திரம்.

22. உம்முடைய கண்களுக்கு
முன்பாக இராதபடிக்கு
வெட்டுண்டேன்
என்று நான் என்
மனக்கலக்கத்திலே
சொன்னேன்;



ஆனாலும் நான் உம்மை
நோக்கிக் கூப்பிட்டபோது,
என் விண்ணப்பங்களின்
சத்தத்தைக் கேட்டீர்.

23. **கர்த்தருடைய**
பரிசுத்தவான்களே,
நீங்களெல்லாரும்
அவரில் அன்புகூருங்கள்;
உண்மையானவனைக்
**கர்த்தர்** தற்காத்து,
இடும்புசெய்கிறவனுக்குப்
பூரணமாய்ப் பதிலளிப்பார்.

24. **கர்த்தருக்குக்**
காத்திருக்கிறவர்களே,
நீங்களெல்லாரும்
திடமனதாயிருங்கள்,
அவர் உங்கள் இருதயத்தை
ஸ்திரப்படுத்துவார்.



**(மஸ்கீல் என்னும் தாவீதின் போதக சங்கீதம்)**

1. எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான்.

2. எவனுடைய அக்கிரமத்தைக் **கர்த்தர்** எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ, அவன் பாக்கியவான்.

3. நான் அடக்கி வைத்தமட்டும், நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்து போயிற்று.

4. இரவும் பகலும் என்மேல் உம்முடைய கை பாரமாயிருந்ததினால், என் சாரம் உஷ்ணகால வறட்சிபோல வறண்டு போயிற்று. (சேலா.)

5. **நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர். (சேலா).**



**இது ஒரு பாவஅறிக்கையின் சங்கீதம்.**

6. இதற்காகச் சகாயங்கிடைக்குங் காலத்தில் பக்தியுள்ளவனெவனும் உம்மை நோக்கி விண்ணப்பஞ்செய்வான்; அப்பொழுது மிகுந்த ஜலப்பிரவாகம் வந்தாலும் அது அவனை அணுகாது.

7. நீர் எனக்கு மறைவிடமாயிருக்கிறீர்; என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக் காத்து, இரட்சணியப் பாடல்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளும்படி செய்வீர். (சேலா)

8. **நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.**

9. வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச் சேராத புத்தியில்லாக் குதிரையைப் போலவும் கோவேறு கழுதையைப் போலவும் இருக்கவேண்டாம்.



10. துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு; **கர்த்தரை** நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்துகொள்ளும்.

11. நீதிமான்களே, **கர்த்தருக்குள்** மகிழ்ந்து களிகூருங்கள்; செம்மையான இருதயமுள்ளவர்களே, நீங்கள் எல்லாரும் ஆனந்தமுழக்கமிடுங்கள்.



1. நீதிமான்களே, **கர்த்தருக்குள்** களிகூருங்கள்; துதிசெய்வது செம்மையானவர்களுக்குத் தகும்.

2. சுரமண்டலத்தினால் **கர்த்தரைத்** துதித்து, பத்து நரம்பு வீணையினாலும் அவரைக் கீர்த்தனம் பண்ணுங்கள்.



3. அவருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; ஆனந்த சத்தத்தோடே வாத்தியங்களை நேர்த்தியாய் வாசியுங்கள்.

4. **கர்த்தருடைய** வார்த்தை உத்தமமும், அவருடைய செய்கையெல்லாம் சத்தியமுமாயிருக்கிறது.




5. அவர் நீதியிலும் நியாயத்திலும் பிரியப்படுகிறார்; பூமி **கர்த்தருடைய** காருணியத்தினால் நிறைந்திருக்கிறது.

6. **கர்த்தருடைய** வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது.

7. அவர் சமுத்திர ஜலங்களைக் குவியலாகச் சேர்த்து, ஆழமான ஜலங்களைப் பொக்கிஷவைப்பாக வைக்கிறார்.

8. பூமியெல்லாம் **கர்த்தருக்குப்** பயப்படுவதாக; உலகத்திலுள்ள குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக.

9. அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்.

10. **கர்த்தர்** ஜாதிகளின் ஆலோசனையை விருதாவாக்கி, ஜனங்களுடைய நினைவுகளை அவமாக்குகிறார்.

11. **கர்த்தருடைய** ஆலோசனை நித்தியகாலமாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும்.

12. **கர்த்தரைத்** தங்களுக்குத் தெய்வமாகக்கொண்ட ஜாதியும், அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது.

13. **கர்த்தர்** வானத்திலிருந்து நோக்கிப் பார்த்து, எல்லா மனுபுத்திரரையும் காண்கிறார்.

14. தாம் வாசமாயிருக்கிற ஸ்தானத்திலிருந்து பூமியின் குடிகள் எல்லார்மேலும் கண்ணோக்கமாயிருக்கிறார்.

15. அவர்களுடைய இருதயங்களையெல்லாம் அவர் உருவாக்கி, அவர்கள் செய்கைகளையெல்லாம் கவனித்திருக்கிறார்.

16. எந்த ராஜாவும் தன் சேனையின் மிகுதியால் இரட்சிக்கப்படான்; சவுரியவானும் தன் பலத்தின் மிகுதியால் தப்பான்.



17. இரட்சிக்கிறதற்குக்
குதிரை விருதா;
அது தன் மிகுந்த வீரியத்தால்
தப்புவியாது.

18. தமக்குப் பயந்து,
தமது கிருபைக்குக்
காத்திருக்கிறவர்களின்
ஆத்துமாக்களை மரணத்திற்கு
விலக்கி விடுவிக்கவும்;

19. பஞ்சத்தில் அவர்களை
உயிரோடே காக்கவும்,
**கர்த்தருடைய** கண் அவர்கள்
மேல் நோக்கமாயிருக்கிறது.

20. நம்முடைய ஆத்துமா
**கர்த்தருக்குக்** காத்திருக்கிறது;
அவரே நமக்குத் துணையும்
நமக்குக் கேடகமுமானவர்.

21. அவருடைய பரிசுத்த
நாமத்தை
நாம் நம்பியிருக்கிறபடியால்,
நம்முடைய இருதயம்
அவருக்குள் களிகூரும்.

22. **கர்த்தாவே,** நாங்கள்
உம்மை நம்பியிருக்கிறபடியே
உமது கிருபை
எங்கள்மேல் இருப்பதாக.

### முக்கிய அதிகாரங்கள்

**23** கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்.

**51** பாவ அறிக்கையின் ஜெபம்

**100** துதியின் சங்கீதம்.

**119** வேதவசனமாகிய தேவனுடைய வார்த்தையின் மகிமை.

**145** மகிமையின் தேவனை துதித்துப் போற்றுங்கள்.

## சங்கீதம் 34

### (தாவீது அபிமெலேக்குக்கு முன்பாக வேஷமாறினபோது அவனால் துரத்தி விடப்படுகையில் பாடின சங்கீதம்)

1. **கர்த்தரை** நான் எக்காலத்திலும்
ஸ்தோத்திரிப்பேன்;
அவர் துதி எப்போதும்
என் வாயிலிருக்கும்.

2. **கர்த்தருக்குள்** என் ஆத்துமா
மேன்மை பாராட்டும்;
சிறுமைப்பட்டவர்கள்
அதைக்கேட்டு மகிழுவார்கள்.

3. என்னோடே கூடக் **கர்த்தரை**
மகிமைப்படுத்துங்கள்;
நாம் ஒருமித்து அவர் நாமத்தை
உயர்த்துவோமாக.

4. நான் **கர்த்தரைத்**
தேடினேன், அவர் எனக்குச்
செவிகொடுத்து, என்னுடைய
எல்லாப் பயத்துக்கும் என்னை
நீங்கலாக்கிவிட்டார்.

5. அவர்கள் அவரை நோக்கிப்
பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்;
அவர்கள் முகங்கள்
வெட்கப்படவில்லை.

6. இந்த ஏழை கூப்பிட்டான்;
**கர்த்தர்** கேட்டு,
அவனை அவன்
இடுக்கண்களுக்கெல்லாம்
நீங்கலாக்கி இரட்சித்தார்.



7. **கர்த்தருடைய** தூதன்
அவருக்குப் பயந்தவர்களைச்
சூழப் பாளயமிறங்கி
அவர்களை விடுவிக்கிறார்.

8. **கர்த்தர்** நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

9. **கர்த்தருடைய** பரிசுத்தவான்களே, அவருக்குப் பயந்திருங்கள்; அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை.



10. சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; **கர்த்தரைத்** தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது.

11. பிள்ளைகளே, வந்து எனக்குச் செவிகொடுங்கள்; **கர்த்தருக்குப்** பயப்படுதலை உங்களுக்குப் போதிப்பேன்.

12. நன்மையைக் காணும்படி, ஜீவனை விரும்பி, நீடித்த நாட்களைஅபேட்சிக்கிற மனுஷன் யார்?

13. உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள்.

14. தீமையை விட்டு விலகி, நன்மைசெய்; சமாதானத்தைத் தேடி, அதைத் தொடர்ந்துகொள்.

15. **கர்த்தருடைய** கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது.

16. தீமைசெய்கிறவர்களுடைய பேரைப் பூமியில் இராமல் அற்றுப்போகப்பண்ண, **கர்த்தருடைய** முகம் அவர்களுக்கு விரோதமாயிருக்கிறது.

17. நீதிமான்கள் கூப்பிடும்போது **கர்த்தர்** கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார்.

18. நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் **கர்த்தர்** சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்.

19. நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், **கர்த்தர்** அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்.

20. அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார்; அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை.

21. தீமை துன்மார்க்கனைக் கொல்லும்; நீதிமானைப் பகைக்கிறவர்கள் குற்றவாளிகளாவார்கள்.

22. **கர்த்தர்** தமது ஊழியக்காரரின் ஆத்துமாவை மீட்டுக்கொள்ளுகிறார்; அவரை நம்புகிற ஒருவன் மேலும் குற்றஞ்சுமராது.



(தாவீதின் சங்கீதம்)

1. **கர்த்தாவே,**
நீர் என் வழக்காளிகளோடே
வழக்காடி, என்னோடு யுத்தம்
பண்ணுகிறவர்களோடே
யுத்தம் பண்ணும்.



2. நீர் கேடகத்தையும்
பரிசையையும் பிடித்து,
எனக்கு ஒத்தாசையாக
எழுந்து நில்லும்.

3. என்னைத் துன்பப்படுத்துகிற
வர்களோடு எதிர்த்து நின்று,
ஈட்டியையோங்கி
அவர்களை மறித்து:
நான் உன் இரட்சிப்பு
என்று என் ஆத்துமாவுக்குச்
சொல்லும்.

4. என் பிராணனை வாங்கத்
தேடுகிறவர்கள் வெட்கப்பட்டுக்
கலங்குவார்களாக;
எனக்குத் தீங்குசெய்ய
நினைக்கிறவர்கள்
நாணமடைவார்களாக.

5. அவர்கள் காற்றுமுகத்தில்
பறக்கும் பதரைப்
போலாவார்களாக;
**கர்த்தருடைய** தூதன்
அவர்களைத் துரத்துவானாக.



6. அவர்களுடைய வழி இருளும்
சறுக்கலுமாயிருப்பதாக;
**கர்த்தருடைய** தூதன்
அவர்களைப் பின்தொடருவானாக.

7. முகாந்தரமில்லாமல்
எனக்காகத் தங்கள் வலையைக்
குழியில் ஒளித்து வைத்தார்கள்;
முகாந்தரமில்லாமல்
என் ஆத்துமாவுக்குப் படுகுழி
வெட்டினார்கள்.

8. அவன் நினையாத அழிவு
அவனுக்கு வரவும்,
அவன் மறைவாய் வைத்த வலை
அவனையே பிடிக்கவுங்கடவது;
அவனே அந்தக் குழியில்
விழுந்து அழிவானாக.

9. என் ஆத்துமா **கர்த்தரில்**
களிகூர்ந்து, அவருடைய
இரட்சிப்பில் மகிழ்ந்திருக்கும்.

10. சிறுமைப்பட்டவனை
அவனிலும் பலவானுடைய
கைக்கும், சிறுமையும்
எளிமையுமானவனைக்
கொள்ளையிடுகிறவனுடைய
கைக்கும் தப்புவிக்கிற
உமக்கொப்பானவர் யார் **கர்த்தாவே,**
என்று என் எலும்புகளெல்லாம்
சொல்லும்.

11. கொடுமையான சாட்சிகள்
எழும்பி, நான் அறியாததை
என்னிடத்தில் கேட்கிறார்கள்.

12. நான் செய்த நன்மைக்குப்
பதிலாகத் தீமை செய்கிறார்கள்;
என் ஆத்துமா திக்கற்றுப்
போகப் பார்க்கிறார்கள்.

13. அவர்கள் வியாதியாயிருந்த
போது இரட்டு
என் உடுப்பாயிருந்தது;
நான் உபவாசத்தால்
என் ஆத்துமாவை உபத்திரவப்
படுத்தினேன்; என் ஜெபமும்
என் மடியிலே திரும்பவந்தது.

14. நான் அவனை என்
சிநேகிதனாகவும் சகோதரனாகவும்
பாவித்து நடந்துகொண்டேன்;
தாய்க்காகத் துக்கிக்கிறவனைப்
போல் துக்கவஸ்திரம் தரித்துத்
தலைகவிழ்ந்து நடந்தேன்.

15. ஆனாலும் எனக்கு
ஆபத்துண்டானபோது
அவர்கள் சந்தோஷப்பட்டுக்
கூட்டங்கூடினார்கள்;
நீசரும் நான் அறியாதவர்களும்
எனக்கு விரோதமாய்க்
கூட்டங்கூடி, ஓயாமல்
என்னை நிந்தித்தார்கள்.

16. அப்பத்திற்காக இச்சகம்
பேசுகிற பரியாசக்காரரோடே
சேர்ந்து கொண்டு
என்பேரில் பற்கடிக்கிறார்கள்.

17. ஆண்டவரே, எதுவரைக்கும்
இதைப் பார்த்துக் கொண்டிருப்பீர்?
என் ஆத்துமாவை அழிவுக்கும்,
எனக்கு அருமையானதைச்
சிங்கக் குட்டிகளுக்கும்
தப்புவியும்.



18. மகா சபையிலே
உம்மைத் துதிப்பேன்,
திரளான ஜனங்களுக்குள்ளே
உம்மைப் புகழுவேன்.

19. வீணாய் எனக்குச்
சத்துருக்களானவர்கள்
என்னிமித்தம் சந்தோஷியாம
லும், முகாந்தரமில்லாமல்
என்னைப் பகைக்கிறவர்கள்
கண் சிமிட்டாமலும்
இருப்பார்களாக.

20. அவர்கள் சமாதானமாய்ப்
பேசாமல், தேசத்திலே
அமைதலாயிருக்கிறவர்களுக்கு
விரோதமாய் வஞ்சகமான
காரியங்களைக் கருதுகிறார்கள்.

21. எனக்கு விரோதமாகத்
தங்கள் வாயை விரிவாய்த்
திறந்து, ஆ ஆ, ஆ ஆ,
எங்கள் கண் கண்டது என்கிறார்கள்.

22. **கர்த்தாவே**, நீர் இதைக்
கண்டீர், மவுனமாயிராதேயும்;
ஆண்டவரே, எனக்குத்
தூரமாகாதேயும்.

23. என் தேவனே, என் ஆண்டவரே,
எனக்கு நியாயஞ்செய்யவும்
என் வழக்கைத் தீர்க்கவும்
விழித்துக்கொண்டு எழுந்தருளும்.

24. என் தேவனாகிய **கர்த்தாவே,**
உம்முடைய நீதியின்படி
என்னை நியாயம் விசாரியும்,
என்னைக் குறித்து அவர்களை
மகிழவொட்டாதிரும்.

25. அவர்கள் தங்கள் இருதயத்திலே:
ஆ ஆ, இதுவே
நாங்கள் விரும்பினது
என்று சொல்லாதபடிக்கும்,
அவனை விழுங்கிவிட்டோம்
என்று பேசாதபடிக்கும் செய்யும்.

26. எனக்கு நேரிட்ட ஆபத்துக்காகச்
சந்தோஷிக்கிறவர்கள் ஏகமாய்
வெட்கி நாணி,
எனக்கு விரோதமாய்ப்
பெருமை பாராட்டுகிறவர்கள்
வெட்கத்தாலும் இலச்சையாலும்
மூடப்படக்கடவர்கள்.

27. என் நீதிவிளங்க
விரும்புகிறவர்கள்
கெம்பீரித்து மகிழ்ந்து,
தமது ஊழியக்காரனுடைய
சுகத்தை விரும்புகிற **கர்த்தருக்கு**
மகிமை உண்டாவதாக
என்று எப்போதும் சொல்லக்
கடவர்கள்.

28. என் நாவு உமது நீதியையும்,
நாள்முழுதும் உமது துதியையும்
சொல்லிக்கொண்டிருக்கும்.

# சங்கீதம் 36



**(கர்த்தருடைய தாசனாகிய தாவீது இராகத்தலைவனுக்கு ஒப்புவித்த சங்கீதம்)**

1. துன்மார்க்கனுடைய துரோகப் பேச்சு என் உள்ளத்திற்குத் தெரியும்; அவன் கண்களுக்குமுன் தெய்வபயம் இல்லை.

2. அவன், தன் அக்கிரமம் அருவருப்பானதென்று, காணப்படுமளவும், தன் பார்வைக்கேற்றபடி தனக்குத்தானே இச்சகம் பேசுகிறான்.

3. அவன் வாயின் வார்த்தைகள் அக்கிரமமும் வஞ்சகமுமுள்ளது; புத்தியாய் நடந்து கொள்வதையும் நன்மை செய்வதையும் விட்டுவிட்டான்.

4. அவன் தன் படுக்கையின்மேல் அக்கிரமத்தை யோசித்து, நல்லதல்லாத வழியிலே நிலைத்து, பொல்லாப்பை வெறுக்காதிருக்கிறான்.



5. **கர்த்தாவே,** உமது கிருபை வானங்களில் விளங்குகிறது; உமது சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்தம் எட்டுகிறது.

6. உமது நீதி மகத்தான பர்வதங்கள் போலவும், உமது நியாயங்கள் மகா ஆழமாகவும் இருக்கிறது; **கர்த்தாவே,** மனுஷரையும் மிருகங்களையும் காப்பாற்றுகிறீர்.



7. தேவனே, உம்முடைய கிருபை எவ்வளவு அருமையானது! அதினால் மனுபுத்திரர் உமது செட்டைகளின் நிழலிலே வந்தடைகிறார்கள்.

8. உமது ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் திருப்தியடைவார்கள்; உமது பேரின்ப நதியினால் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறீர்.



9. ஜீவஊற்று உம்மிடத்தில் இருக்கிறது; உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம்.



10. உம்மை அறிந்தவர்கள்மேல் உமது கிருபையையும், செம்மையான இருதயமுள்ளவர்கள் மேல் உமது நீதியையும் பாராட்டியருளும்.



11. பெருமைக்காரரின் கால் என்மேல் வராமலும், துன்மார்க்கருடைய கை என்னைப் பறக்கடியாமலும் இருப்பதாக.



12. அதோ அக்கிரமக்காரரர் விழுந்தார்கள்; எழுந்திருக்க மாட்டாமல் தள்ளுண்டு போனார்கள்.

**சங்கீதங்களின்** இராகமும், அவைகளின் இசை மீட்டப்படும் இசைக் கருவிகளின் பெயர்களும் சில இடங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. எந்த சூழ்நிலையில் சங்கீதம் இயற்றப்பட்டது என்பதையும் சில சங்கீதங்களின் ஆரம்பத்தில் நீங்கள் கவனிக்கலாம்.



(தாவீதின் சங்கீதம்)

1. பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடையாதே; நியாயக்கேடு செய்கிறவர்கள் மேல் பொறாமை கொள்ளாதே.

2. அவர்கள் புல்லைப்போல் சீக்கிரமாய் அறுப்புண்டு, பசும்பூண்டைப் போல் வாடிப்போவார்கள்.



3. **கர்த்தரை** நம்பி நன்மை செய்; தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள்.

4. **கர்த்தரிடத்தில்** மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார்.

5. உன் வழியைக் **கர்த்தருக்கு** ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.



6. உன் நீதியை வெளிச்சத்தைப் போலவும், உன் நியாயத்தைப் பட்டப்பகலைப் போலவும் விளங்கப்பண்ணுவார்.

7. **கர்த்தரை** நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு; காரியசித்தியுள்ளவன்மேலும் தீவினைகளைச் செய்கிற மனுஷன்மேலும் எரிச்சலாகாதே.

8. கோபத்தை நெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடு; பொல்லாப்புச் செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம்.

9. பொல்லாதவர்கள் அறுப்புண்டு போவார்கள்; **கர்த்தருக்குக்** காத்திருக்கிறவர்களோ பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்.

10. இன்னுங் கொஞ்சநேரந்தான், அப்போது துன்மார்க்கன் இரான்; அவன் ஸ்தானத்தை உற்று விசாரித்தாயானால் அவன் இல்லை.

11. சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள்.

12. துன்மார்க்கன் நீதிமானுக்கு விரோதமாய்த் தீங்கு நினைத்து, அவன் பேரில் பற்கடிக்கிறான்.

13. ஆண்டவர் அவனைப் பார்த்து நகைக்கிறார்; அவனுடைய நாள் வருகிறதென்று காண்கிறார்.

14. சிறுமையும் எளிமையுமானவனை மடிவிக்கவும், செம்மை மார்க்கத்தாரை விழப்பண்ணவும், துன்மார்க்கர் பட்டயத்தை உருவி, தங்கள் வில்லை நாணேற்றுகிறார்கள்.

15. ஆனாலும் அவர்கள் பட்டயம் அவர்களுடைய இருதயத்திற்குள் உருவிப்போம்; அவர்கள் வில்லுகள் முறியும்.

16. அநேக துன்மார்க்கருக்குள்ள செல்வத்திரட்சியைப்பார்க்கிலும், நீதிமானுக்குள்ள கொஞ்சமே நல்லது.

17. துன்மார்க்கருடைய புயங்கள் முறியும்; நீதிமான்களையோ **கர்த்தர்** தாங்குகிறார்.

18. உத்தமர்களின் நாட்களைக் **கர்த்தர்** அறிந்திருக்கிறார்; அவர்கள் சுதந்தரம் என்றென்றைக்கும் இருக்கும்.

19. அவர்கள் ஆபத்துக்காலத்திலே வெட்கப்பட்டுப் போகாதிருந்து, பஞ்சகாலத்திலே திருப்தியடைவார்கள்.

20. துன்மார்க்கரோ அழிந்து போவார்கள், **கர்த்தருடைய** சத்துருக்கள் ஆட்டுக்குட்டிகளின் நிணத்தைப்போல் புகைந்து போவார்கள், அவர்கள் புகையாய்ப் புகைந்துபோவார்கள்.

21. துன்மார்க்கன் கடன் வாங்கிச் செலுத்தாமற்போகிறான்; நீதிமானோ இரங்கிக்கொடுக்கிறான்.

22. அவரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்; அவரால் சபிக்கப்பட்டவர்களோ அறுப்புண்டுபோவார்கள்.

23. நல்ல மனுஷனுடைய நடைகள் **கர்த்தரால்** உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்.

24. அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை; **கர்த்தர்** தமது கையினால் அவனைத் தாங்குகிறார்.

25. நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன்; ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை.

26. அவன் நித்தம் இரங்கிக் கடன் கொடுக்கிறான், அவன் சந்ததி ஆசீர்வதிக்கப்படும்.

27. தீமையை விட்டு விலகி, நன்மை செய்; என்றென்றைக்கும் நிலைத்திருப்பாய்.

28. **கர்த்தர்** நியாயத்தை விரும்புகிறவர்; அவர் தமது பரிசுத்தவான்களைக் கைவிடுவதில்லை; அவர்கள் என்றைக்கும் காக்கப்படுவார்கள்; துன்மார்க்கருடைய சந்ததியோ அறுப்புண்டுபோம்.

29. நீதிமான்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொண்டு, என்றைக்கும் அதிலே வாசமாயிருப்பார்கள்.

30. நீதிமானுடைய வாய் ஞானத்தை உரைத்து, அவனுடைய நாவு நியாயத்தைப் பேசும்.



31. அவனுடைய தேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது; அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை.

32. துன்மார்க்கன் நீதிமான்மேல் கண்வைத்து, அவனைக் கொல்ல வகை தேடுகிறான்.

33. **கர்த்தரோ** அவனை இவன் கையில் விடுவதில்லை;அவன் நியாயம் விசாரிக்கப்படுகையில், அவனை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதுமில்லை.

34. நீ **கர்த்தருக்குக்** காத்திருந்து, அவருடைய வழியைக் கைக்கொள்; அப்பொழுது நீ பூமியைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு அவர் உன்னை உயர்த்துவார்; துன்மார்க்கர் அறுப்புண்டு போவதை நீ காண்பாய்.

35. கொடிய பலவந்தனான ஒரு துன்மார்க்கனைக் கண்டேன், அவன் தனக்கேற்ற நிலத்தில் முளைத்திருக்கிற பச்சைமரத்தைப்போல் தழைத்தவனாயிருந்தான்.

36. ஆனாலும் அவன் ஒழிந்து போனான்; பாருங்கள், அவன் இல்லை; அவனைத் தேடினேன், அவன் காணப்படவில்லை.

37. நீ உத்தமனை நோக்கி செம்மையானவனைப் பார்த்திரு; அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்.

38. அக்கிரமக்காரர் ஏகமாய் அழிக்கப்படுவார்கள்; அறுப்புண்டுபோவதே துன்மார்க்கரின் முடிவு.

39. நீதிமான்களுடைய இரட்சிப்பு **கர்த்தரால்** வரும்; இக்கட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம்.

40. **கர்த்தர்** அவர்களுக்கு உதவிசெய்து, அவர்களை விடுவிப்பார்; அவர்கள் அவரை நம்பியிருக்கிறபடியால், அவர்களைத் துன்மார்க்கருடைய கைக்குத் தப்புவித்து இரட்சிப்பார்.

## எழுதியவர்கள்

**150** சங்கீதங்களில் **100** சங்கீதங்களை எழுதியவர்களின் பெயர்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

தாவீது அரசன் **70** க்கும் அதிகமான சங்கீதங்களையும், ஆசாப் **12,** கோராகின் புத்திரர் **11,** சாலொமோன் **2,** மோசே **1,**ஏமான்**1,**ஈத்தான் **1** சங்கீதங்களை எழுதினார்கள். **50** சங்கீதங்கள் யாரால் எழுதப்பட்டன என்று பெயர் கொடுக்கப்படவில்லை. இப்படிப் பலராலும் எழுதப்பட்ட சங்கீதங்களின் தொகுப்பு தான் சங்கீதப் புத்தகமாகும்.





**(நினைவுகூருதலுக்காகத் தாவீது பாடின லியாஸ்கர் என்னும் சங்கீதம்.)**

1. **கர்த்தாவே,** உம்முடைய கோபத்தில் என்னைக் கடிந்துகொள்ளாதேயும்; உம்முடைய உக்கிரத்தில் என்னைத் தண்டியாதேயும்.

2. உம்முடைய அம்புகள் எனக்குள்ளே தைத்திருக்கிறது; உமது கை என்னை இருத்துகிறது.

3. உமது கோபத்தினால் என் மாம்சத்தில் ஆரோக்கியமில்லை; என் பாவத்தினால் என் எலும்புகளில் சவுக்கியமில்லை.

**4. என் அக்கிரமங்கள் என் தலைக்கு மேலாகப்பெருகிற்று, அவைகள் பாரச்சுமையைப் போல என்னால் தாங்கக் கூடாத பாரமாயிற்று.**

5. என் மதிகேட்டினிமித்தம் என் புண்கள் அழுகி நாற்றமெடுத்தது.

6. நான் வேதனைப்பட்டு ஒடுங்கினேன்; நாள்முழுதும் துக்கப்பட்டுத் திரிகிறேன்.

7. என் குடல்கள் எரிபந்தமாய் எரிகிறது; என் மாம்சத்தில் ஆரோக்கியம் இல்லை.

8. நான் பெலனற்றுப்போய், மிகவும் நொறுக்கப்பட்டேன்; என் இருதயத்தின் கொந்தளிப்பினால் கதறுகிறேன்.

**பாவ அறிக்கையின் சங்கீதம்**

9. **ஆண்டவரே,** என் ஏக்கங்களெல்லாம் / ஏங்கலெல்லாம் உமக்கு முன்பாக இருக்கிறது; என் தவிப்பு உமக்கு மறைவாயிருக்கவில்லை.

10. என் உள்ளம் குழம்பி அலைகிறது; என் பெலன் என்னை விட்டு விலகி, என் கண்களின் ஒளி முதலாய் இல்லாமற்போயிற்று.

11. என் சிநேகிதரும் என் தோழரும் என் வாதையைக் கண்டு விலகுகிறார்கள். என் இனத்தாரும் தூரத்திலே நிற்கிறார்கள்.

12. என் பிராணனை வாங்கத்தேடுகிறவர்கள் எனக்குக் கண்ணிகளை வைக்கிறார்கள்; எனக்குப் பொல்லாங்கு தேடுகிறவர்கள் கேடானவைகளைப் பேசி, நாள்முழுதும் வஞ்சனைகளை யோசிக்கிறார்கள்.

13. நானோ செவிடனைப் போலக் கேளாதவனாகவும், ஊமையனைப் போல வாய் திறவாதவனாகவும் இருக்கிறேன்.

14. காதுகேளாதவனும், தன் வாயில் மறு உத்தரவுகள் இல்லாதவனுமாயிருக்கிற மனுஷனைப் போலானேன்.

15. **கர்த்தாவே,**
உமக்குக் காத்திருக்கிறேன்;
என் தேவனாகிய ஆண்டவரே,
நீர் மறுஉத்தரவு கொடுப்பீர்.

16. அவர்கள் என்னிமித்தம்
சந்தோஷப்படாதபடிக்கு
இப்படிச் சொன்னேன்;
என் கால் தவறும்போது
என்மேல் பெருமை
பாராட்டுவார்களே.

17. நான் தடுமாறி விழ
ஏதுவாயிருக்கிறேன்;
என் துக்கம் எப்பொழுதும்
என் முன்பாக இருக்கிறது.

18. என் அக்கிரமத்தை
நான் அறிக்கையிட்டு,
என் பாவத்தினிமித்தம்
விசாரப்படுகிறேன்.

19. என் சத்துருக்கள் வாழ்ந்து
பலத்திருக்கிறார்கள்;
முகாந்தரமில்லாமல்
என்னைப் பகைக்கிறவர்கள்
பெருகியிருக்கிறார்கள்.

20. நான் நன்மையைப்
பின்பற்றுகிறபடியால்,
நன்மைக்குத் தீமை செய்கிறவர்கள்
என்னை விரோதிக்கிறார்கள்.

21. **கர்த்தாவே,**
என்னைக் கைவிடாதேயும்;
என் தேவனே,
எனக்குத் தூரமாயிராதேயும்.

22. என் இரட்சிப்பாகிய
ஆண்டவரே,
எனக்குச் சகாயஞ்செய்யத்
தீவிரியும்

## சங்கீதம் 39

**(எதுதூன் இடத்தில் ஒப்புவித்த தாவீதின் சங்கீதம்)**

1. என் நாவினால்
பாவஞ்செய்யாதபடிக்கு
நான் என் வழிகளைக் காத்து,
துன்மார்க்கன் எனக்கு முன்பாக
இருக்குமட்டும் என் வாயைக்
கடிவாளத்தால் அடக்கி
வைப்பேன் என்றேன்.



2. நான் மவுனமாகி,
ஊமையனாயிருந்தேன்,
நலமானதையும் பேசாமல்
அமர்ந்திருந்தேன்; ஆனாலும்
என் துக்கம் அதிகரித்தது:

3. என் இருதயம் எனக்குள்ளே
அனல் கொண்டது;
நான் தியானிக்கையில்
அக்கினி மூண்டது;
அப்பொழுது என் நாவினால்
விண்ணப்பம் செய்தேன்.

4. **கர்த்தாவே,** நான் எவ்வளவாய்
நிலையற்றவன் என்று உணரும்படி
என் முடிவையும்,
என் நாட்களின் அளவு இவ்வளவு
என்பதையும் எனக்குத் தெரிவியும்.

5. இதோ, என் நாட்களை நாலு
விரற்கடையளவாக்கினீர்;
என் ஆயுசு உமது பார்வைக்கு
இல்லாதது போலிருக்கிறது;
எந்த மனுஷனும் மாயையே
என்பது நிச்சயம் (சேலா)

6. வேஷமாகவே மனுஷன்
திரிகிறான்; விருதாவாகவே
சஞ்சலப்படுகிறான்;
ஆஸ்தியைச் சேர்க்கிறான்,
யார் அதை வாரிக்கொள்ளுவான்
என்று அறியான்.

7. இப்போதும் ஆண்டவரே,
நான் எதற்கு
எதிர்பார்த்திருக்கிறேன்?
நீரே என் நம்பிக்கை.

8. என் மீறுதல்கள்
எல்லாவற்றிலுமிருந்து
என்னை விடுதலையாக்கும்,
மூடனுடைய நிந்தனைக்கு
என்னை ஒப்புக்கொடாதேயும்.

9. நீரே இதைச் செய்தீர் என்று
நான் என் வாயைத் திறவாமல்
மவுனமாயிருந்தேன்.

10. என்னிலிருந்து உம்முடைய
வாதையை எடுத்துப்போடும்;
உமது கரத்தின் அடிகளால்
நான் சோர்ந்து போனேன்.

11. அக்கிரமத்தினிமித்தம்
நீர் மனுஷனைக் கடிந்துகொண்டு
தண்டிக்கிறபோது,
அவன் வடிவைப்
பொட்டரிப்பைப் போல்
அழியப்பண்ணுகிறீர்;
நிச்சயமாக எந்த மனுஷனும்
மாயையே. (சேலா)

12. **கர்த்தாவே,** என் ஜெபத்தைக்
கேட்டு, என் கூப்பிடுதலுக்குச்
செவிகொடும்; என் கண்ணீருக்கு
மவுனமாயிராதேயும்;
என் பிதாக்களெல்லாரையும்
போல நானும்
உமக்கு முன்பாக அந்நியனும்
பரதேசியுமாயிருக்கிறேன்.

13. நான் இனி இராமற்போகு
முன்னே, தேறுதலடையும்படி
என்னிடத்தில்
பொறுமையாயிரும்.

## சங்கீதம் 40

**(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்)**

1. **கர்த்தருக்காகப்** பொறுமையுடன்
காத்திருந்தேன்;
அவர் என்னிடமாய்ச் சாய்ந்து,
என் கூப்பிடுதலைக் கேட்டார்.

2. பயங்கரமான குழியிலும்
உளையான சேற்றிலுமிருந்து
என்னைத் தூக்கியெடுத்து,
என் கால்களைக்
கன்மலையின்மேல் நிறுத்தி,
என் அடிகளை உறுதிப்படுத்தி,

3. நமது தேவனைத் துதிக்கும்
புதுப்பாட்டை
அவர் என் வாயிலே
கொடுத்தார்; அநேகர்
அதைக் கண்டு,பயந்து,
**கர்த்தரை** நம்புவார்கள்.



4. அகங்காரிகளையும் பொய்யைச்
சார்ந்திருக்கிறவர்களையும்
நோக்காமல், **கர்த்தரையே**
தன் நம்பிக்கையாக வைக்கிற
மனுஷன் பாக்கியவான்.

5. என் தேவனாகிய **கர்த்தாவே,**
நீர் எங்கள் நிமித்தஞ்செய்த
உம்முடைய அதிசயங்களும்
உம்முடைய யோசனைகளும்
அநேகமாயிருக்கிறது; ஒருவரும்
அவைகளை உமக்கு விவரித்துச்
சொல்லிமுடியாது;
நான் அவைகளைச் சொல்லி
அறிவிக்கவேண்டுமானால்
அவைகள் எண்ணிக்கைக்கு
மேலானவைகள்.

6. பலியையும் காணிக்கையையும்
நீர் விரும்பாமல்,
என் செவிகளைத் திறந்தீர்;
சர்வாங்க தகனபலியையும்
பாவநிவாரண பலியையும்
நீர் கேட்கவில்லை.

7. அப்பொழுது நான், இதோ,
வருகிறேன்; புஸ்தகச்சுருளில்
என்னைக் குறித்து
எழுதியிருக்கிறது;



8. என் தேவனே,
உமக்குப் பிரியமானதைச்
செய்ய விரும்புகிறேன்;
உமது நியாயப்பிரமாணம்
என் உள்ளத்திற்குள் இருக்கிறது
என்று சொன்னேன்.

9. மகா சபையிலே நீதியைப்
பிரசங்கித்தேன்; என் உதடுகளை
மூடேன், **கர்த்தாவே,**
நீர் அதை அறிவீர்.

10. உம்முடைய நீதியை
நான் என் இருதயத்திற்குள்
மறைத்து வைக்கவில்லை;
உமது சத்தியத்தையும்
உமது இரட்சிப்பையும்
சொல்லியிருக்கிறேன்;
உமது கிருபையையும்
உமது உண்மையையும்
மகா சபைக்கு அறிவியாதபடிக்கு
நான் ஒளித்துவைக்கவில்லை.

11. **கர்த்தாவே**
நீர் உம்முடைய இரக்கங்களை
எனக்குக் கிடையாமற்
போகப்பண்ணாதேயும்;
உமது கிருபையும்
உமது உண்மையும் எப்பொழுதும்
என்னைக் காக்கக்கடவது.

12. எண்ணிக்கைக்கு அடங்காத
தீமைகள் என்னைச் சூழ்ந்து
கொண்டது, என் அக்கிரமங்கள்
என்னைத் தொடர்ந்து
பிடித்தது, நான் நிமிர்ந்து
பார்க்கக்கூடாதிருக்கிறது,
அவைகள் என் தலைமயிரிலும்
அதிகமாயிருக்கிறது,
என் இருதயம் சோர்ந்துபோகிறது.

13. **கர்த்தாவே,**
என்னை விடுவித்தருளும்;
**கர்த்தாவே,** எனக்குச் சகாயம்
பண்ணத் தீவிரியும்.

14. என் பிராணனை அழிக்கத்
தேடுகிறவர்கள் ஏகமாய் வெட்கி
நாணி, எனக்குத் தீங்குசெய்ய
விரும்புகிறவர்கள் பின்னிட்டு
இலச்சையடைவார்களாக.

15. என்பேரில் ஆ ஆ! ஆ ஆ!
என்று சொல்லுகிறவர்கள்,
தங்கள் வெட்கத்தின்
பலனையடைந்து
கைவிடப்படுவார்களாக.

16. உம்மைத் தேடுகிற
அனைவரும் உமக்குள் மகிழ்ந்து
சந்தோஷப்படுவார்களாக;
உம்முடைய இரட்சிப்பை
விரும்புகிறவர்கள் **கர்த்தருக்கு**
மகிமை உண்டாவதாக என்று
எப்பொழுதும் சொல்வார்களாக.

17. நான் சிறுமையும்
எளிமையுமானவன், **கர்த்தரோ**
என்மேல் நினைவாயிருக்கிறார்;
தேவரீர் என் துணையும்
என்னை
விடுவிக்கிறவருமாயிருக்கிறீர்;
என் தேவனே, தாமதியாதேயும்.

**(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்)**

1. சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்குநாளில் **கர்த்தர்** அவனை விடுவிப்பார்.

2. **கர்த்தர்** அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார்; பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான்; அவன் சத்துருக்களின் இஷ்டத்திற்கு நீர் அவனை ஒப்புக்கொடீர்.



3. படுக்கையின்மேல் வியாதியாய்க் கிடக்கிற அவனைக் **கர்த்தர்** தாங்குவார்; அவனுடைய வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப்போடுவீர்.

4. **கர்த்தாவே,** என்மேல் இரக்கமாயிரும்; உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன், என் ஆத்துமாவைக் குணமாக்கும் என்று நான் சொன்னேன்.

5. அவன் எப்பொழுது சாவான், அவன் பேர் எப்பொழுது அழியும்? என்று என் சத்துருக்கள் எனக்கு விரோதமாய்ச் சொல்லுகிறார்கள்.

6. ஒருவன் என்னைப் பார்க்க வந்தால் வஞ்சனையாய்ப் பேசுகிறான்; அவன் தன் இருதயத்தில் அக்கிரமத்தைச் சேகரித்துக்கொண்டு, தெருவிலே போய்,அதைத் தூற்றுகிறான்.

7. என் பகைஞரெல்லாரும் என்மேல் ஏகமாய் முணுமுணுத்து, எனக்கு விரோதமாயிருந்து, எனக்குப் பொல்லாங்கு நினைத்து,



8. தீராவியாதி அவனைப் பிடித்துக்கொண்டது; படுக்கையில் கிடக்கிற அவன் இனி எழுந்திருப்பதில்லை என்கிறார்கள்.

9. என் பிராணசிநேகிதனும், நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும், என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்.



10. **கர்த்தாவே,** நீர் எனக்கு இரங்கி, நான் அவர்களுக்குச் சரிக்கட்ட என்னை எழுந்திருக்கப்பண்ணும்.

11. என் சத்துரு என்மேல் ஜெயங்கொள்ளாததினால், நீர் என்மேல் பிரியமாயிருக்கிறீரென்று அறிவேன்.



12. நீர் என் உத்தமத்திலே என்னைத் தாங்கி, என்றென்றைக்கும் உம்முடைய சமூகத்தில் என்னை நிலைநிறுத்துவீர்.

13. இஸ்ரவேலின் தேவனாகிய **கர்த்தர்** அநாதியாய் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவர், **ஆமென், ஆமென்.**



**சங்கீதங்கள் 1- 41**

**பாகம் 1. முடிவடைகிறது.**

**(கோராகின் புத்திரரிலுள்ள இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட மஸ்கீல் என்னும் தாவீதின் சங்கீதம்)**

1. மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது.

2. என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது; நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்?

3. உன் தேவன் எங்கே என்று அவர்கள் நாள்தோறும் என்னிடத்தில் சொல்லுகிற படியால், இரவும் பகலும் என் கண்ணீரே எனக்கு உணவாயிற்று.

4. முன்னே நான் பண்டிகையை ஆசரிக்கிற ஜனங்களோடே கூட நடந்து, கூட்டத்தின் களிப்பும் துதியுமான சத்தத்தோடே தேவாலயத்திற்குப் போய்வருவேனே; இவைகளை நான் நினைக்கும் போது என் உள்ளம் எனக்குள்ளே உருகுகிறது.

5. என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு: அவர் சமுகத்து இரட்சிப்பினிமித்தம் நான் இன்னும் அவரைத் துதிப்பேன்.



6. என் தேவனே, என் ஆத்துமா எனக்குள் கலங்குகிறது; ஆகையால் யோர்தான் தேசத்திலும் எர்மோன் மலைகளிலும் சிறுமலையிலுமிருந்து உம்மை நினைக்கிறேன்.

7. உமது மதகுகளின் இரைச்சலால் ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது; உமது அலைகளும் திரைகளும் எல்லாம் என்மேல் புரண்டு போகிறது.

8. ஆகிலும் **கர்த்தர்** பகற்காலத்திலே தமது கிருபையைக் கட்டளை யிடுகிறார்; இராக்காலத்திலே அவரைப் பாடும்பாட்டு என் வாயிலிருக்கிறது; என் ஜீவனுடைய தேவனை நோக்கி விண்ணப்பஞ்செய்கிறேன்.

9. நான் என் கன்மலையாகிய தேவனை நோக்கி:ஏன் என்னை மறந்தீர்? சத்துருவினால் ஒடுக்கப்பட்டு, நான் ஏன் துக்கத்துடனே திரியவேண்டும் என்று சொல்லுகிறேன்.

10. உன் தேவன் எங்கே என்று என் சத்துருக்கள் நாள்தோறும் என்னோடே சொல்லி, என்னை நிந்திப்பது என் எலும்புகளை உருவக்குத்துகிறதுபோல் இருக்கிறது.



11. என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு; என்முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்.

## சங்கீதம் 43

1. தேவனே, நீர்
என் நியாயத்தை விசாரித்து,
பக்தியில்லாத ஜாதியாரோடு
எனக்காக வழக்காடி,
சூதும் அநியாயமுமான
மனுஷனுக்கு
என்னைத் தப்புவியும்.

2. என் அரணாகிய தேவன் நீர்;
ஏன் என்னைத் தள்ளிவிடுகிறீர்?
சத்துருவினால் ஒடுக்கப்பட்டு
நான் ஏன் துக்கத்துடனே
திரியவேண்டும்?

3. உமது வெளிச்சத்தையும்
உமது சத்தியத்தையும்
அனுப்பியருளும்;
அவைகள் என்னை நடத்தி,
உமது பரிசுத்த பர்வதத்திற்கும்
உமது வாசஸ்தலங்களுக்கும்
என்னைக் கொண்டு போவதாக.

4. அப்பொழுது நான் தேவனுடைய
பீடத்தண்டைக்கும்,
எனக்கு ஆனந்த
மகிழ்ச்சியாயிருக்கிற
தேவனிடத்திற்கும்
பிரவேசிப்பேன்.
தேவனே, என் தேவனே,
உம்மைச் சுரமண்டலத்தால்
துதிப்பேன்.



5. என் ஆத்துமாவே,
நீ ஏன் கலங்குகிறாய்?
ஏன் எனக்குள்
தியங்குகிறாய்?
தேவனை நோக்கிக் காத்திரு;
என் முகத்திற்கு இரட்சிப்பும்
என் தேவனுமாயிருக்கிறவரை
நான் இன்னும் துதிப்பேன்.



## சங்கீதம் 44

**(கோராகின் புத்திரரில்
இராகத்தலைவனுக்கு
ஒப்புவிக்கப்பட்ட மஸ்கீல்
என்னும் சங்கீதம்)**

1. தேவனே, எங்கள்
பிதாக்களுடைய நாட்களாகிய
பூர்வநாட்களில் நீர் நடப்பித்த
கிரியைகளை அவர்கள்
எங்களுக்கு அறிவித்தார்கள்;
அவைகளை எங்கள்
காதுகளால் கேட்டோம்.

2. தேவரீர் உம்முடைய
கையினாலே ஜாதிகளைத்
துரத்தி, இவர்களை நாட்டி;
ஜனங்களைத் துன்பப்படுத்தி,
இவர்களைப் பரவப்பண்ணினீர்.

3. அவர்கள் தங்கள் பட்டயத்தால்
தேசத்தைக்
கட்டிக்கொள்ளவில்லை;
அவர்கள் புயமும்
அவர்களை இரட்சிக்கவில்லை;
நீர் அவர்கள்மேல்
பிரியமாயிருந்தபடியால்,
உம்முடைய வலதுகரமும்,
உம்முடைய புயமும்,
உம்முடைய முகத்தின் பிரகாசமும்
அவர்களை இரட்சித்தது.

4. தேவனே, நீர் என் ராஜா;
யாக்கோபுக்கு இரட்சிப்பைக்
கட்டளையிடும்.

5. உம்மாலே
எங்கள் சத்துருக்களைக்
கீழே விழத்தாக்கி, எங்களுக்கு
விரோதமாய்
எழும்புகிறவர்களை உம்முடைய
நாமத்தினால் மிதிப்போம்.

6. என் வில்லை
நான் நம்பேன்,
என் பட்டயம்
என்னை இரட்சிப்பதில்லை.



7. நீரே எங்கள் சத்துருக்களினின்று
எங்களை இரட்சித்து,
எங்களைப் பகைக்கிறவர்களை
வெட்கப்படுத்துகிறீர்.

8. தேவனுக்குள் நித்தம்மேன்மை
பாராட்டுவோம்;
உமது நாமத்தை
என்றென்றைக்கும்
துதிப்போம். (சேலா)



9. நீர் எங்களைத் தள்ளிவிட்டு,
நாணப்பண்ணுகிறீர்;
எங்கள் சேனைகளுடனே
செல்லாதிருக்கிறீர்.

10. சத்துருவுக்கு நாங்கள் இடைந்து
பின்னிட்டுத் திரும்பிப்போகப்
பண்ணுகிறீர்; எங்கள் பகைஞர்
தங்களுக்கென்று எங்களைக்
கொள்ளையிடுகிறார்கள்.

11. நீர் எங்களை
ஆடுகளைப்போல
இரையாக ஒப்புக்கொடுத்து,
ஜாதிகளுக்குள்ளே
எங்களைச் சிதறடிக்கிறீர்.



12. நீர் உம்முடைய ஜனங்களை
இலவசமாக விற்கிறீர்;
அவர்கள் கிரயத்தினால்
உமக்கு லாபமில்லையே.

13. எங்கள் அயலாருக்கு
எங்களை நிந்தையாகவும்,
எங்கள் சுற்றுப்புறத்தாருக்குப்
பரியாசமும் சக்கந்தமுமாகவும்
வைக்கிறீர்.

14. நாங்கள் ஜாதிகளுக்குள்ளே
பழமொழியாயிருக்கவும்,
ஜனங்கள் எங்களைக்
குறித்துத் தலைதுலுக்கவும்
செய்கிறீர்.

15. நிந்தித்துத்
தூஷிக்கிறவனுடைய
சத்தத்தினிமித்தமும்,
சத்துருவினிமித்தமும்,
பழிவாங்குகிறவனிமித்தமும்,

16. என் இலச்சை நித்தம்
எனக்கு முன்பாக இருக்கிறது;
என் முகத்தின் வெட்கம்
என்னை மூடுகிறது.



17. இவையெல்லாம்
எங்கள்மேல் வந்திருந்தும்,
உம்மை நாங்கள் மறக்கவும்
இல்லை, உம்முடைய
உடன்படிக்கைக்குத்
துரோகம்பண்ணவும் இல்லை.

18. நீர் எங்களை
வலுசர்ப்பங்களுள்ள
இடத்திலே நொறுக்கி,
மரண இருளினாலே
எங்களை மூடியிருந்தும்,

19. எங்கள் இருதயம்
பின்வாங்கவும் இல்லை,
எங்கள் காலடி
உம்முடைய பாதையை
விட்டு விலகவும் இல்லை.



20. நாங்கள்
எங்கள் தேவனுடைய
நாமத்தை மறந்து,
அந்நிய தேவனை நோக்கிக்
கையெடுத்திருந்தோமானால்,

21. தேவன் அதை ஆராய்ந்து,
விசாரியாதிருப்பாரோ?
இருதயத்தின்
அந்தரங்கங்களை
அவர் அறிந்திருக்கிறாரே.



22. உமது நிமித்தம் எந்நேரமும்
கொல்லப்படுகிறோம்;
அடிக்கப்படும் ஆடுகளைப்
போல எண்ணப்படுகிறோம்.

23. ஆண்டவரே,
விழித்துக்கொள்ளும்;
ஏன் நித்திரை
பண்ணுகிறீர்?
எழுந்தருளும்,
எங்களை
என்றைக்கும்
தள்ளிவிடாதிரும்.



24. ஏன் உம்முடைய முகத்தை
மறைத்து,
எங்கள் சிறுமையையும்
எங்கள் நெருக்கத்தையும்
மறந்துவிடுகிறீர்?

25. எங்கள் ஆத்துமா
புழுதிமட்டும் தாழ்ந்திருக்கிறது;
எங்கள் வயிறு தரையோடு
ஒட்டியிருக்கிறது.

26. எங்களுக்கு ஒத்தாசையாக
எழுந்தருளும்;
உம்முடைய
கிருபையினிமித்தம்
எங்களை மீட்டுவிடும்.



## சங்கீதம் 45

**(சோஷனீம் என்னும் வாத்தியத்திலே வாசிக்கக் கோராகின் புத்திரரிலுள்ள இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட நேசப்பாட்டாகிய சங்கீதம்)**

1. என் இருதயம் நல்ல
விசேஷத்தினால்
பொங்குகிறது;
நான் ராஜாவைக்
குறித்துப் பாடின
கவியைச் சொல்லுகிறேன்;
என் நாவு விரைவாய்
எழுதுகிறவனுடைய எழுத்தாணி.



2. எல்லா மனுபுத்திரரிலும்
நீர் மகா சவுந்தரியமுள்ளவர்;
உம்முடைய உதடுகளில்
அருள் பொழிகிறது;
ஆகையால் தேவன்
உம்மை என்றென்றைக்கும்
ஆசீர்வதிக்கிறார்.

3. சவுரியவானே,
உமது மகிமையும்
உமது மகத்துவமாகிய
உம்முடைய பட்டயத்தை
நீர் உம்முடைய அரையிலே
கட்டிக்கொண்டு,

4. சத்தியத்தினிமித்தமும்,
நீதியுடன் கூடிய
சாந்தத்தினிமித்தமும்,
உமது மகத்துவத்திலே
ஜெயமாக ஏறிவாரும்;
உமது வலதுகரம்
பயங்கரமானவைகளை
உமக்கு விளங்கப்பண்ணும்.



5. உம்முடைய அம்புகள்
கூர்மையானவைகள்,
அவைகள் ராஜாவுடைய
சத்துருக்களின் இருதயத்திற்குள்
பாயும்; ஜனசதளங்கள்
உமக்குக் கீழே விழுவார்கள்.

6. தேவனே, உமது சிங்காசனம்
என்றென்றைக்குமுள்ளது,
உமது ராஜ்யத்தின்
செங்கோல் நீதியுள்ள
செங்கோலாயிருக்கிறது.



7. நீர் நீதியை விரும்பி,
அக்கிரமத்தை வெறுக்கிறீர்;
ஆதலால் தேவனே,
உம்முடைய தேவன்
உமது தோழரைப் பார்க்கிலும்
உம்மை ஆனந்ததைலத்தினால்
அபிஷேகம்பண்ணினார்.

8. தந்தத்தினால் செய்த
அரமனைகளிலிருந்து
புறப்படுகையில், நீர் மகிழும்படி
உமது வஸ்திரங்களெல்லாம்
வெள்ளைப்போளம்
சந்தனம் லவங்கம்
இவைகளின் வாசனை
பொருந்தியதாயிருக்கிறது.





9. உமது நாயகிகளுக்குள்ளே
அரசரின் குமாரத்திகளுண்டு,
ராஜஸ்திரீ ஓப்பீரின் தங்கம்
அணிந்தவளாய் உமது
வலதுபாரிசத்தில் நிற்கிறாள்.

10. குமாரத்தியே கேள்,
நீ உன் செவியைச் சாய்த்துச்
சிந்தித்துக்கொள்;
உன் ஜனத்தையும்
உன் தகப்பன்
வீட்டையும் மறந்துவிடு.



11. அப்பொழுது ராஜா
உன் அழகில் பிரியப்படுவார்;
அவர் உன் ஆண்டவர், ஆகையால்
அவரைப் பணிந்துகொள்.

12. தீரு குமாரத்தி காணிக்கை
கொண்டுவருவாள்; ஜனங்களில்
ஐசுவரியவான்களும் உன் தயவை
நாடி வணங்குவார்கள்.

13. ராஜகுமாரத்தி உள்ளாகப்
பூரண மகிமையுள்ளவள்;
அவள் உடை
பொற்சரிகையாயிருக்கிறது.

14. சித்திரத்தையலாடை
தரித்தவளாய், ராஜாவினிடத்தில்
அழைத்துக் கொண்டு
வரப்படுவாள்;
அவள் பின்னாலே செல்லும்
அவளுடைய தோழிகளாகிய
கன்னிகைகள் உம்மிடத்தில்
கூட்டிக்கொண்டு
வரப்படுவார்கள்.

15. அவர்கள் மகிழ்ச்சியோடும்
களிப்போடும் வந்து,
ராஜ அரமனைக்குள்
பிரவேசிப்பார்கள்.

16. உமது பிதாக்களுக்குப் பதிலாக
உமது குமாரர் இருப்பார்கள்;
அவர்களைப் பூமியெங்கும்
பிரபுக்களாக வைப்பீர்.

17. உமது நாமத்தை எல்லாத்
தலைமுறைகளிலும்
பிரஸ்தாபப்படுத்துவேன்,
இதினிமித்தம் ஜனங்கள்
உம்மை என்றென்றைக்குமுள்ள
சதாகாலங்களிலும்
துதிப்பார்கள்.



**( அலாமோத்தில் வாசிக்கக் கோராகின் புத்திரரிலுள்ள இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட பாட்டு)**
**அலாமோத் (விளக்கம்) என்ற வார்த்தையின் பொருள் உச்ச குரலில் உள்ள இசையில் பெண்கள் பாடுவது.**

1. தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.

2. ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும்,

3. அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம். (சேலா)

4. ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தையும், உன்னதமானவர் வாசம்பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும்.

5. தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது; அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார்.



6. ஜாதிகள் கொந்தளித்தது, ராஜ்யங்கள் தத்தளித்தது; அவர் தமது சத்தத்தை முழங்கப்பண்ணினார், பூமி உருகிப்போயிற்று.



7. சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்; யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்(சேலா)

8. பூமியிலே பாழ்க்கடிப்புகளை நடப்பிக்கிற கர்த்தருடைய செய்கைகளை வந்து பாருங்கள்.

9. அவர் பூமியின் கடைமுனை மட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார்; வில்லை ஒடித்து, ஈட்டியை முறிக்கிறார்; இரதங்களை நெருப்பினால் சுட்டெரிக்கிறார்.



10. நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்; ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்.



11. சேனைகளின் **கர்த்தர்** நம்மோடிருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர். ( சேலா)

**முக்கிய வசனங்கள்**
***19:14; 29:2 145:21***

**(கோராகின் புத்திரரிலுள்ள இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதம்)**

1. சகல ஜனங்களே, கைகொட்டி, தேவனுக்கு முன்பாகக் கெம்பீர சத்தமாய் ஆர்ப்பரியுங்கள்.



2. உன்னதமானவராகிய **கர்த்தர்** பயங்கரமானவரும், பூமியின் மீதெங்கும் மகத்துவமான ராஜாவுமாயிருக்கிறார்.

3. ஜனங்களை நமக்கு வசப்படுத்தி, ஜாதிகளை நம்முடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்துவார்.

4. தமக்குப் பிரியமான யாக்கோபின் சிறப்பான தேசத்தை நமக்குச் சுதந்தரமாகத் தெரிந்தளிப்பார். (சேலா)

5. தேவன் ஆர்ப்பரிப்பே **கர்த்தர்** எக்காள சத்தத்தோடும் உயர எழுந்தருளினார்.



6. தேவனைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள்; நம்முடைய ராஜாவைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள்.

7. தேவன் பூமியனைத்திற்கும் ராஜா; கருத்துடனே அவரைப் போற்றிப் பாடுங்கள்.



8. தேவன் ஜாதிகள்மேல் அரசாளுகிறார்; தேவன் தமது பரிசுத்த சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறார்.

9. ஜனங்களின் பிரபுக்கள் ஆபிரகாமின் தேவனுடைய ஜனங்களாகச் சேர்க்கப்படுகிறார்கள்; பூமியின் கேடகங்கள் தேவனுடையவைகள்; அவர் மகா உன்னதமானவர்.

## இப்புத்தகத்தைப் பற்றி



**'சங்கீதம்'** என்ற வார்த்தையின் பொருள் **'துதி'** என்பதாகும். தேவனைத் துதித்துப் போற்றிப் புகழ்ந்து பாடும் கருத்தான பாடல்கள் பல இப்புத்தகத்தில் காணப்படுகின்றன. பழைய ஏற்பாட்டின் புத்தகங்களில் இப்புத்தகத்தை மக்கள் மிகவும் அதிகமாக விரும்பி வாசிக்கிறார்கள் என்றால் அதற்கு காரணம் உண்டு.

தேவனைப் பற்றி அதிகமாக இப்புத்தகம் எடுத்துச் சொல்கிறது. சாதாரண மனிதனின் வாழ்க்கையில் அவனை எதிர்கொள்ளும் பலவிதமான அனுபவங்கள், சூழ்நிலைகள், தோல்விகள், வெற்றிகள் காரணமாக எழும்பும் உணர்ச்சிகளும், உள்ளக் குமுறல்களும், கருத்துக்களும் அப்படியே சங்கீதப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன.



**(கோராகின் புத்திரருக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதப்பாட்டு)**

1. **கர்த்தர்** பெரியவர், அவர் நமது தேவனுடைய நகரத்திலும், தமது பரிசுத்த பர்வதத்திலும் மிகவும் துதிக்கப்படத்தக்கவர்.

2. வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம் வடிப்பமான ஸ்தானமும் சர்வ பூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது, அதுவே மகாராஜாவின் நகரம்.

3. அதின் அரமனைகளில் தேவன் உயர்ந்த அடைக்கலமாக அறியப்பட்டிருக்கிறார்.

4. இதோ, ராஜாக்கள் கூடிக்கொண்டு, ஏகமாய்க் கடந்து வந்தார்கள்.

5. அவர்கள் அதைக் கண்டபோது பிரமித்துக் கலங்கி விரைந்தோடினார்கள்.

6. அங்கே நடுக்கங்கொண்டு, பிரசவவேதனைப்படுகிற ஸ்திரீயைப்போல வேதனைப்பட்டார்கள்.

7. கீழ்காற்றினால் தர்ஷீசின் கப்பல்களை நீர் உடைக்கிறீர்.

8. நாம் கேள்விப்பட்டபடியே நமது தேவனுடைய நகரமாகிய சேனைகளுடைய **கர்த்தரின்** நகரத்திலே கண்டோம்; தேவன் அதை என்றென்றைக்கும் ஸ்திரப்படுத்துவார். (சேலா)

9. தேவனே, உமது ஆலயத்தின் நடுவிலே, உமது கிருபையைச் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

10. தேவனே, உமது நாமம் விளங்குகிறதுபோல உமது புகழ்ச்சியும் பூமியின் கடையாந்தரங்கள் பரியந்தமும் விளங்குகிறது; உமது வலதுகரம் நீதியால் நிறைந்திருக்கிறது.

11. உம்முடைய நியாயத்தீர்ப்புகளினிமித்தம் சீயோன் பர்வதம் மகிழ்வதாக, யூதாவின் குமாரத்திகள் களிகூருவார்களாக.

12. சீயோனைச் சுற்றி உலாவி, அதின் கொத்தளங்களை எண்ணுங்கள்.

13. பின்வரும் சந்ததிக்கு நீங்கள் விவரிப்பதற்காக, அதின் அலங்கத்தைக் கவனித்து, அதின் அரமனைகளை உற்றுப்பாருங்கள்.

14. இந்தத் தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்.

இந்தப் புத்தகம் ஒரு பக்தி நூலாகும். தேவனை நேசிக்கும் ஒரு பக்தன் தனக்கும் அவருக்குமுள்ள நெருக்கமான உறவை பலவிதங்களில் வெவ்வேறு வார்த்தைகளைக் கொண்டு வெளிப்படுத்துவதை,விவரிப்பதை இப்புத்தகத்தில் பார்க்கலாம்.

**(கோராகின் புத்திரரிலுள்ள இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதம்)**

1. ஜனங்களே, நீங்கள் எல்லாரும் இதைக் கேளுங்கள்.

2. பூமியின் குடிகளே, சிறியோரும் பெரியோரும் ஐசுவரியவான்களும் எளியவர்களுமாகிய நீங்கள் எல்லாரும் ஏகமாய்ச் செவிகொடுங்கள்.

3. என் வாய் ஞானத்தைப் பேசும்; என் இருதயம் உணர்வைத் தியானிக்கும்.

4. என் செவியை உவமை மொழிக்குச் சாய்த்து, என் மறைபொருளைச் சுரமண்டலத்தின்மேல் வெளிப்படுத்துவேன்.

5. என்னைத் தொடருகிறவர்களுடைய அக்கிரமம் என்னைச் சூழ்ந்து கொள்ளுந் தீங்குநாட்களில், நான் பயப்பட வேண்டியதென்ன?

6. தங்கள் செல்வத்தை நம்பி தங்கள் திரளான ஐசுவரியத்தினால் பெருமை பாராட்டுகிற,

7. ஒருவனாவது, தன் சகோதரன் அழிவைக் காணாமல் இனி என்றைக்கும் உயிரோடிருக்கும்படி,

8. எவ்விதத்தினாலாவது அவனை மீட்டுக்கொள்ளவும், அவனிமித்தம் மீட்கும் பொருளை தேவனுக்குக் கொடுக்கவுங்கூடாதே.

9. அவர்கள் ஆத்துமமீட்பு மிகவும் அருமையாயிருக்கிறது; அது ஒருபோதும் முடியாது.

10. ஞானிகளும் மரித்து, அஞ்ஞானிகளும் நிர்மூடரும் ஏகமாய் அழிந்து, தங்கள் ஆஸ்தியை மற்றவர்களுக்கு வைத்துப் போகிறதைக் காண்கிறான்.

11. தங்கள் வீடுகள் நித்தியகாலமாகவும், தங்கள் வாசஸ்தலங்கள் தலைமுறை தலைமுறையாகவும் இருக்குமென்பது அவர்கள் உள்ளத்தின் அபிப்பிராயம்; அவர்கள் தங்கள் நாமங்களைத் தங்கள் நிலங்களுக்குத் தரிக்கிறார்கள்.

12. ஆகிலும் கனம் பொருந்தியவனாயிருக்கிற மனுஷன் நிலைத்திருக்கிறதில்லை; அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறான்.

13. இதுதான் அவர்கள் வழி, இதுதான் அவர்கள் பைத்தியம்; ஆகிலும் அவர்கள் சந்ததியார் அவர்கள் சொல்லை மெச்சிக் கொள்ளுகிறார்கள். (சேலா)

**முக்கிய வசனங்கள்**

19:14; 29:2 145:21

**முக்கிய வார்த்தைகள்**

துதியுங்கள், அல்லேலூயா. அல்லேலூயா என்ற வார்த்தையின் பொருள் ‘ தேவனைத் துதி ‘ என்பதாகும்.

14. ஆட்டு மந்தையைப்போல பாதாளத்திலே கிடத்தப் படுகிறார்கள்; மரணம் அவர்களை மேய்ந்து போடும்; செம்மையானவர்கள் அதிகாலையில் அவர்களை ஆண்டுகொள்வார்கள்; அவர்கள் தங்கள் வாசஸ்தலத்தில் நிலைத்திருக்கக்கூடாதபடி, அவர்களுடைய ரூபத்தைப் பாதாளம் அழிக்கும்.

15. ஆனாலும் தேவன் என் ஆத்துமாவைப் பாதாளத்தின் வல்லமைக்குத் தப்புவித்து மீட்பார், அவர் என்னை ஏற்றுக்கொள்வார். (சேலா)

16. ஒருவன் ஐசுவரியவானாகி, அவன் வீட்டின் மகிமை பெருகும்போது,நீ பயப்படாதே.

17. அவன் மரிக்கும்போது ஒன்றும் கொண்டுபோவதில்லை; அவன் மகிமை அவனைப் பின்பற்றிச் செல்வதுமில்லை.

18. அவன் உயிரோடிருக்கையில் தன் ஆத்துமாவை வாழ்த்தினாலும்: நீ உனக்கு நன்மையை நாடினாய் என்று மனுஷர் அவனைப் புகழ்ந்தாலும்,

19. அவன் என்றென்றைக்கும் வெளிச்சத்தைக் காணாத தன் பிதாக்களின் சந்ததியைச் சேருவான்.

20. கனம் பொருந்தினவனாயிருந்தும் அறிவில்லாத மனுஷன் அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறான்.

## சங்கீதம் 50

### (ஆசாபின் சங்கீதம்)

1. வல்லமையுள்ள தேவனாகிய **கர்த்தர்** வசனித்து, சூரியன் உதிக்குந் திசை தொடங்கி அது அஸ்தமிக்குந் திசை வரைக்குமுள்ள பூமியைக் கூப்பிடுகிறார்.

2. பூரண வடிவுள்ள சீயோனிலிருந்து தேவன் பிரகாசிக்கிறார்.

3. நம்முடைய தேவன் வருவார், மவுனமாயிரார்; அவருக்கு முன் அக்கினி பட்சிக்கும்; அவரைச் சுற்றிலும் மகா புசல் கொந்தளிப்பாயிருக்கும்.

4. அவர் தம்முடைய ஜனத்தை நியாயந்தீர்க்க உயர இருக்கும் வானங்களையும் பூமியையும் கூப்பிடுவார்.

5. பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்.

6. வானங்கள் அவருடைய நீதியை அறிவிக்கும்; தேவனே நியாயாதிபதி. (சேலா)

7. என் ஜனமே, கேள், நான் பேசுவேன்; இஸ்ரவேலே, உனக்கு விரோதமாய்ச் சாட்சியிடுவேன்;நானே தேவன், உன் தேவனாயிருக்கிறேன்.

8. உன் பலிகளினிமித்தம் உன்னைக் கடிந்துகொள்ளேன்; உன் தகனபலிகள் எப்போதும் எனக்கு முன்பாக இருக்கிறது.

9. உன் வீட்டிலிருந்து காளைகளையும், உன் தொழுவங்களிலிருந்து ஆட்டுக் கடாக்களையும் நான் வாங்கிக்கொள்வதில்லை.

10. சகல காட்டுஜீவன்களும், பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற மிருகங்களும் என்னுடையவைகள்.

11. மலைகளிலுள்ள பறவைகளையெல்லாம் அறிவேன்; வெளியில் நடமாடுகிறவைகளெல்லாம் என்னுடையவைகள்.

12. நான் பசியாயிருந்தால் உனக்குச் சொல்லேன்; பூமியும் அதின் நிறைவும் என்னுடையவைகளே.

13. நான் எருதுகளின் மாம்சம் புசித்து, ஆட்டுக்கடாக்களின் இரத்தம் குடிப்பேனோ?

14. நீ தேவனுக்கு ஸ்தோத்திர பலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி;

15. ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்.

16. தேவன் துன்மார்க்கனை நோக்கி: நீ என் பிரமாணங்களை எடுத்துரைக்கவும், என் உடன்படிக்கையை உன் வாயினால் சொல்லவும், உனக்கு என்ன நியாயமுண்டு.

17. சிட்சையை நீ பகைத்து, என் வார்த்தைகளை உனக்குப் பின்னாக எறிந்து போடுகிறாய்.

18. நீ திருடனைக் காணும்போது அவனோடு ஒருமித்துப் போகிறாய்; விபசாரரோடும் உனக்குப் பங்குண்டு.

19. உன் வாயைப் பொல்லாப்புக்குத் திறக்கிறாய்; உன் நாவு சற்பனையைப் பிணைக்கிறது.

20. நீ உட்கார்ந்து உன் சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, உன் தாயின் மகனுக்கு அவதூறு உண்டாக்குகிறாய்.

21. இவைகளை நீ செய்யும்போது நான் மவுனமாயிருந்தேன், உன்னைப்போல் நானும் இருப்பேன் என்று நினைவு கொண்டாய்; ஆனாலும் நான் உன்னைக் கடிந்துகொண்டு, அவைகளை உன் கண்களுக்கு முன்பாக ஒவ்வொன்றாக நிறுத்துவேன்.

22. தேவனை மறக்கிறவர்களே, இதைச் சிந்தித்துக்கொள்ளுங்கள்; இல்லாவிட்டால் நான் உங்களைப் பீறிப்போடுவேன், ஒருவரும் உங்களை விடுவிப்பதில்லை.

23. ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்; தன் வழியைச் செவ்வைப் படுத்துகிறவனுக்குத் தேவனுடைய இரட்சிப்பை வெளிப்படுத்துவேன் என்று சொல்லுகிறார்.

**(பத்சேபாளிடத்தில் தாவீது பாவத்திற்குட்பட்ட பின்பு நாத்தான் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவன் பாவத்தை உணர்த்தின போது பாடி, இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)**

1. தேவனே, உமது கிருபையின்படி
எனக்கு இரங்கும்,
உமது மிகுந்த இரக்கங்களின்
படி என் மீறுதல்கள்
நீங்க என்னைச் சுத்திகரியும்.

**2. என் அக்கிரமம் நீங்க
என்னை முற்றிலும் கழுவி,
என் பாவமற
என்னைச் சுத்திகரியும்.**

3. என் மீறுதல்களை
நான் அறிந்திருக்கிறேன்;
என் பாவம்
எப்பொழுதும்
எனக்கு முன்பாக
நிற்கிறது.



4. தேவரீர் ஒருவருக்கே
விரோதமாக நான்
பாவஞ்செய்து,
உமது கண்களுக்கு முன்பாகப்
பொல்லாங்கானதை
நடப்பித்தேன்; நீர் பேசும்
போது உம்முடைய நீதி
விளங்கவும்,நீர்
நியாயந்தீர்க்கும் போது
உம்முடைய பரிசுத்தம்
விளங்கவும்
இதை அறிக்கையிடுகிறேன்.

5. இதோ, நான் துர்க்குணத்தில்
உருவானேன்;
என் தாய் என்னைப்
பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்.

6. இதோ, உள்ளத்தில்
உண்மையிருக்க விரும்புகிறீர்;
அந்தக்கரணத்தில் ஞானத்தை
எனக்குத் தெரியப்படுத்துவீர்.

7. நீர் என்னை ஈசோப்பினால்
சுத்திகரியும், அப்பொழுது
நான் சுத்தமாவேன்;
என்னைக் கழுவியருளும்,
அப்பொழுது நான் உறைந்த
மழையிலும் வெண்மையாவேன்.

8. நான் சந்தோஷமும்
மகிழ்ச்சியும் கேட்கும்படி
செய்யும், அப்பொழுது
நீர் நொறுக்கின எலும்புகள்
களிகூரும்.

9. என் பாவங்களைப் பாராத
படிக்கு நீர் உமது முகத்தை
மறைத்து,
என் அக்கிரமங்களையெல்லாம்
நீக்கியருளும்.

**10. தேவனே, சுத்த இருதயத்தை
என்னிலே சிருஷ்டியும்,
நிலைவரமான ஆவியை
என் உள்ளத்திலே
புதுப்பியும்.**

11. உமது சமுகத்தை விட்டு
என்னைத் தள்ளாமலும்,
உமது பரிசுத்த ஆவியை
என்னிடத்திலிருந்து
எடுத்துக்கொள்ளாமலும்
இரும்.

**பாவ அறிக்கையின் சங்கீதங்கள் - 7**
6, 32, 38, 51, 102, 130, 143

**இது ஒரு முக்கியமான
பாவஅறிக்கையின் சங்கீதமாகும்.**

12. உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்.

13. அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்; பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்.

14. தேவனே, என்னை இரட்சிக்குந் தேவனே, இரத்தப்பழிகளுக்கு என்னை நீங்கலாக்கிவிடும்; அப்பொழுது என் நாவு உம்முடைய நீதியைக் கெம்பீரமாய்ப் பாடும்.

15. ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தருளும்; அப்பொழுது என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்.

16. பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்; தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல.

17. தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.

18. சீயோனுக்கு உமது பிரியத்தின் படி நன்மை செய்யும்; எருசலேமின் மதில்களைக் கட்டுவீராக.

19. அப்பொழுது தகனபலியும் சர்வாங்க தகனபலியுமாகிய நீதியின் பலிகளில் பிரியப்படுவீர்; அப்பொழுது உமது பீடத்தின் மேல் காளைகளைப் பலியிடுவார்கள்.

## சங்கீதம் 52

**(தாவீது அபிமெலேக்கின் வீட்டுக்கு வந்தானென்று ஏதோமியனாகிய தோவேக்கு வந்து சவுலுக்கு அறிவித்த பின்பு தாவீதினால் பாடப்பட்டு இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட மஸ்கீல் என்னும் சங்கீதம்)**

1. பலவானே, பொல்லாப்பில் ஏன் பெருமை பாராட்டுகிறாய்? தேவனுடைய கிருபை எந்நாளுமுள்ளது.

2. நீ கேடுகளைச் செய்ய எத்தனம் பண்ணுகிறாய், கபடு செய்யும் உன் நாவு தீட்டப்பட்ட சவரகன் கத்தியைப் போல் இருக்கிறது.

3. நன்மையைப் பார்க்கிலும் தீமையையும், யதார்த்தம் பேசுகிறதைப் பார்க்கிலும் பொய்யையும் விரும்புகிறாய். (சேலா)

4. கபடமுள்ள நாவே, சங்கரிக்கும் சகல வார்த்தைகளையும் நீ விரும்புகிறாய்.

5. தேவன் உன்னை என்றென்றைக்கும் இராதபடி அழித்துப்போடுவார்; அவர் உன்னைப் பிடித்து, உன் வாசஸ்தலத்திலிருந்து பிடுங்கி, நீ ஜீவனுள்ளோர் தேசத்தில் இராதபடிக்கு உன்னை நிர்மூலமாக்குவார். (சேலா)

6. நீதிமான்கள் அதைக்கண்டு பயந்து, அவனைப்பார்த்து நகைத்து:

7. இதோ, தேவனைத் தன் பெலனாக எண்ணாமல், தன் செல்வப்பெருக்கத்தை நம்பி, தன் தீவினையில் பலத்துக்கொண்ட மனுஷன் இவன்தான் என்பார்கள்.

8. நானோ தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவமரத்தைப் போலிருக்கிறேன், தேவனுடைய கிருபையை என்றென்றைக்கும் நம்பியிருக்கிறேன்.

9. நீரே இதைச் செய்தீர் என்று உம்மை என்றென்றைக்கும் துதித்து, உமது நாமத்திற்குக் காத்திருப்பேன்; உம்முடைய பரிசுத்தவான்களுக்கு முன்பாக அது நலமாயிருக்கிறது.

---

- இராஜரீக சங்கீதங்கள்
  2, 21, 45, 72, 110, 132
- பாவத்திற்காக மனம் வருந்தி ஜெபித்தல்
  32, 38, 51
- சத்துருக்களுக்கு நீதி சரிக்கட்ட வேண்டுதல்
  35, 55, 58, 69, 101, 137

சரித்திர சம்பந்தப்பட்ட சங்கீதங்கள்
78, 81, 105, 106, 126.

- தேவனுடைய வார்த்தையின் மேன்மை
  19, 119

## சங்கீதம் 53

**(மகலாத் என்னும் வாத்தியத்தில் வாசிக்கப்படும்படி தாவீதினால் பாடப்பட்டு இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட மஸ்கீல் என்னும் சங்கீதம்)**

1. தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான்; அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான அக்கிரமங்களைச் செய்துவருகிறார்கள்; நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை.

2. தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க, தேவன் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார்.

3. அவர்கள் எல்லாரும் வழிவிலகி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை.

4. அக்கிரமக்காரருக்கு அறிவு இல்லையா? அப்பத்தைப் பட்சிக்கிறதுபோல் என் ஜனத்தைப் பட்சிக்கிறார்களே; அவர்கள் தேவனைத் தொழுதுகொள்ளுகிறதில்லை.

---

**(தனிச்சுற்றுக்கு மட்டும் )**

5. உனக்கு விரோதமாய்ப் பாளயமிறங்கினவனுடைய எலும்புகளைத் தேவன் சிதறப்பண்ணினபடியால், பயமில்லாத இடத்தில் மிகவும் பயந்தார்கள்; தேவன் அவர்களை வெறுத்த படியினால் நீ அவர்களை வெட்கப்படுத்தினாய்.

6. சீயோனிலிருந்து இஸ்ரவேலுக்கு இரட்சிப்பு வருவதாக; தேவன் தம்முடைய ஜனத்தின் சிறையிருப்பைத் திருப்பும்போது, யாக்கோபுக்குக் களிப்பும் இஸ்ரவேலுக்கு மகிழ்ச்சியும் உண்டாகும்.

## சங்கீதம் 54

**(தாவீது தங்களிடத்தில் ஒளித்துக் கொண்டிருக்கிறான் என்று சீப்பூரார் வந்து சவுலுக்குச் சொன்னபோது, நெகினோத்தில் வாசிக்கத் தாவீதுபாடிஇராகத்தலைவனுக்கு ஒப்புவித்த மஸ்கீல் என்னும் சங்கீதம்)**

1. தேவனே, உமது நாமத்தினிமித்தம் என்னை இரட்சித்து, உமது வல்லமையினால் எனக்கு நியாயஞ்செய்யும்.

2. தேவனே, என் விண்ணப்பத்தைக் கேட்டு, என் வாயின் வார்த்தைகளுக்குச் செவிகொடும்.



3. அந்நியர் எனக்கு விரோதமாய் எழும்புகிறார்கள்; கொடியர் என் பிராணனை வாங்கத் தேடுகிறார்கள்; தேவனைத் தங்களுக்கு முன்பாக நிறுத்தி நோக்கார்கள். (சேலா)

4. இதோ, தேவன் எனக்கு சகாயர்; ஆண்டவர் என் ஆத்துமாவை ஆதரிக்கிறவர்களோடே இருக்கிறார்.

5. அவர் என் சத்துருக்களுக்குத் தீமைக்குத் தீமையைச் சரிக்கட்டுவார், உமது சத்தியத்தினிமித்தம் அவர்களை நிர்மூலமாக்கும்.

6. உற்சாகத்துடன் நான் உமக்குப் பலியிடுவேன்; **கர்த்தாவே,** உமது நாமத்தைத் துதிப்பேன், அது நலமானது.

7. அவர் எல்லா நெருக்கத்தையும் நீக்கி, என்னை விடுவித்தார்; என் கண் என் சத்துருக்களில் நீதி சரிகட்டுதலைக் கண்டது.

❖ மேசியாவின் சங்கீதங்கள் (ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது).
2, 8, 16, 22, 40, 41, 45, 68, 69, 89,102, 109, 110, 118.

❖ தீர்க்கதரிசன சங்கீதங்கள்
2,16, 22, 40, 45, 68, 69, 72, 97,110,118.

❖ அல்லேலூயா சங்கீதங்கள்
106, 111, 112, 113, 117, 125, 146,147, 149, 150.

❖ ஆரோகண சங்கீதங்கள்
120 - 134